பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 27 | வெள்ளிக்கிழமை | 12.01.2024 | அதிர்வு 164

**மக்கள் திண்டாடும் வேளையில்**

## ஆளுங்கட்சி நடுக்கடலில் கொண்டாட்டம்



பொருள்களின் விலை தாறுமாறாக அதிகரித்து மக்கள் திண்டாடும் நிலையில், மஹிந்த ராஜபக்ஷவும், அமைச்சர்களும் மக்கள் பணத்தில் கப்பல்களில் 07▶



# தமிழ்க் கூட்டமைப்பு தமிழரின் சாபக்கேடு

**அது இருக்கும் வரை தமிழினத்துக்கு விமோசனம் கிடையாது என்று அதியுயர் சபையில் கண்டபடி தூற்றினார் நீதி அமைச்சர்**

– சுடர் திலீபன் –

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கும் வரை தமிழர்களுக்கு விமோசனம் கிடையாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் சாபக்கேடு.”

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் கண்டபடி தூற்றினார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ. 06▶

**மட்டக்களப்பில் மாவீரர் நினைவேந்தல் நாளில் கைதான**

## தந்தையும் மகனும் மேலதிக விசாரணைக்காக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைப்பு



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வவுணதீவில் மாவீரர் நாளில் கைது செய்யப்பட்ட இருவரையும் மேலதிக விசாரணைக்காகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்க அனுமதியளித்த மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான், சந்தேநபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறும் 07▶



பதவி ஆசை – பதவியில் நீடிக்க வேண்டும் என்ற பித்து – மனிதர்களை எப்படியெல்லாம் ஆட்டுவிக்கின்றது, அற்பதர்கள் போல செயல்பட வைக்கின்றது என்பதை எண்ணும் போது விசனம் ஏற்படுகின்றது.

கடந்த பத்து வருடங்களாகக் கட்சியின் ஒரே ஒரு தேசிய மாநாட்டை மட்டும் நடத்தி விட்டு, கட்சியைத் தன் முதுசம் போல நினைத்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, 06▶

# மக்களைத் தவறாக வழிநடத்துவதில் மஹிந்த ராஜபக்ஷ சிறந்த நடிகராம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவிப்பு



"சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைக்கு அமைய செயற்படுவதாக இருந்தால் அரசாங்கம் என்பதொன்று தேவையில்லை. நிதியமைச்சை நாணய நிதியத்துக்கு பொறுப்பாக்கலாம். நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதில் மஹிந்த ராஜபக்ஷ சிறந்த நடிகர். வற் வரி விதிப்பின் பெறுபேறு மக்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வாழ்க்கை செலவு அதிகரிப்பு மற்றும் மந்த போசணை பாதிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோட்டபய ராஜபக்ஷ பொருளாதார ரீதியில் எடுத்த தவறான, மூர்க்கத்தனமான தீர்மானங்களினால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. பொருளாதார படுகொலையாளிகள் யார் என்பதை உயர்நீதிமன்றம் தெளிவாக அறிவித்துள்ளது. அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

பொருளாதார படுகொலையாளிகள் சுதந்திரமாகவும்,– உல்லாசமாகவும் வாழுகின்ற நிலையில் பொருளாதாரப் பாதிப்புக்கு பொறுப்புக் கூறத் தேவையில்லாத மக்கள் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரிகளை அமுல்படுத்துமாறு குறிப்பிடவில்லை. வரித் திருத்தம் என்று குறிப்பிட்டுக் கொண்டு நேர் மற்றும் நேரில் வரி தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளன.

நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படுவதாக இருந்தால் அரசாங்கம் என்பதொன்று தேவையில்லை.

நிதியமைச்சை நாணய நிதியத்துக்கு பொறுப்பாக்கலாம். சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை அடிப்படையாக கொண்டு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

மொத்த தேசிய உற்பத்தியை 12 சதவீதமாக அதிகரித்துக் கொண்டு அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ளுமாறு நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரிகளை அமுல்படுத்தாமல் செல்வந்த தரப்பினரிடமிருந்து வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், செல்வந்த வரி, கொடை வரி என்பனவற்றை அறிமுகப்படுத்துமாறும் நாணய நிதியம் குறிப்பிட்டது.

ஆனால் அரசாங்கம் அதனைச் செயற்படுத்தாமல் வற் வரியை அதிகரித்து ஒட்டுமொத்த மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

2021 ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடியின் போது 1.9 ரில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறிகளை அரசாங்கம் விநியோகித்தது. இதனை நிதி நிறுவனங்கள் பல பெற்றுக்கொண்டன. இதற்கு அரசாங்கம் 27 சதவீத வரி செலுத்தியது.

கடன் மறுசீரமைப்பின் போது இந்த நிறுவனங்களிடமிருந்து வரி அறவிட எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 500 குடும்பங்கள் மாத்திரமே வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களைத் திசைத்திருப்பும் சிறந்த நடிகர் என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

நாட்டு மக்களை அதலபாதாளத்துக்கு தள்ளும் வற் வரியை அதிகரிக்கும் பிரேரணைக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களித்து விட்டு, இரு தினங்களுக்குப் பின்னர் வரி அதிகரிப்புக்கு நாங்கள் எதிர்ப்பு என்று அறிக்கை வெளியிடுகிறார்.

மஹிந்த ராஜபக்ஷ உட்பட பொதுஜன பெரமுனவினர் எந்தத் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதை அறிய முடியவில்லை.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் எந்த வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வரி விலக்கு மற்றும் விசேட சலுகை வழங்க கூடாது என்று சர்வதேச நாணய நிதியம் தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதனை கவனத்திற் கொள்ளாமல் சீன நிறுவனத்துக்கு வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது." – என்றார்.

# மண்டைதீவு பொலிஸ் காவல் நிலையம் மீது பெற்றோல் குண்டுகள் வீச்சு; நால்வர் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மண்டைதீவு பொலிஸ் காவல் நிலையம் மீது பெற்றோல் குண்டு வீசிய சம்பவத்துடன் தொடர்புபட்ட நால்வர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மண்டைதீவில் சிலர் கடத்தல் முயற்சியில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவித்துப் பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டிருந்த நிலையில் பொலிஸாரை சிலர் தாக்க முற்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு பொலிஸார் தமது காவல் நிலையத்தில் தங்கியிருந்த சமயம் சிலர் மோட்டார் சைக்கிளில் சென்று மூன்று பெற்றோல் குண்டுகளை வீசியுள்ளனர்.

இவ்வாறு வீசிய ஒரு பெற்றோல் குண்டு வெடிக்காது உடைந்துள்ளபோதும், ஏனைய இரண்டும் பொலிஸ் காவல் நிலையம் உள்ளே வீழ்ந்து வெடித்துள்ளன.

இதன்போது பாரிய சேதங்கள் ஏதும் பொலிஸ் காவல் நிலையத்திற்கு ஏற்படவில்லை. இதனையடுத்து அப்பகுதியில் மேலதிக பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தீவக வீதியின் மண்டைதீவுச் சந்தியில் இருந்து மண்டைதீவு நோக்கிப் பயணிக்கும் பாதையில் மண்டைதீவு பாடசாலை மற்றும் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றிற்கு அருகில் இந்த பொலிஸ் காவல் நிலையம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# எம்.பியானர் நயன வாசலதிலக; வர்த்தமானி அறிவிப்பு வெளியீடு



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக நயன வாசலதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி அண்மையில் பதவி விலகியிருந்தார்.

இந்தநிலையில், ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு நயன வாசலதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினூடாக போட்டியிட்ட நயன வாசலதிலக 31,307 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

# ஒழுக்கத்தைப் பேணும் வகையில் வகுப்புகளை நடத்தத் தீர்மானம்

## கல்வி அமைச்சர் சுசில் தகவல்



“பாடசாலைகளில் ஒழுக்கத்தை பேணும் வகையில் மீண்டும் வகுப்புகளை நடத்துவது தொடர்பான சுற்றறிக்கை எதிர்வரும் காலப்பகுதியில் வெளியிடப்படும்.”

– இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பித்தமையுடன் ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் வகையில் வகுப்புகளை நடத்துவது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட எதிர்பார்த்துள்ளோம்.

ஏற்கனவே, ஒழுக்கம் தொடர்பான விதிகளை உள்ளடக்கிய சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ள போதிலும், அதனைக் கடைப்பிடிக்காமையினால் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன. அதனை கருத்திற்கொண்டு, புதிய சுற்று நிருபத்தை வெளியிடவுள்ளோம்.

இதேவேளை, அடுத்த வாரத்தின் இரண்டு நாள்கள், அனைத்து மாகாணங்களினதும் ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்கள், கல்வி பணிப்பாளர்கள் அனைவரும் கல்வி அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அந்த இரண்டு நாள்களிலும், பாடசாலைகளின் ஒழுக்கம், கல்வி தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும்.” என்றார்.

# ஊடகங்களுக்கு கதவடைப்பு; ஓரவஞ்சனை!

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்ட பிரித்தானிய ஆன் இளவரசி மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் உள்ளிட்டவர்களின் வருகை தொடர்பிலான செய்தி சேகரிப்புக்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அதேவேளை யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டு இயங்கும் வலையொளி அலைவரிசை (YouTube Channel) வைத்திருபோர் உள்ளிட்ட நால்வருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் ஊடகவியலாளர்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தி இருந்தது.

இளவரசி விஜயம் செய்யும் இடங்களில் பிரதான ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை.

அதேவேளை வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவை சேர்ந்தவர்களுக்கும் அனுமதியளிக்கபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# பாதிக்கப்பட்ட மக்களின் ஜனநாயகக் குரல்களை காவல்துறைக் கரம் கொண்டு ஒடுக்க வேண்டாம்!

## வலியுறுத்துகின்றது குரலற்றவர்களின் குரல் அமைப்பு

(வாஸ் கூஞ்ஞ)

பாதிக்கப்பட்ட குடிமக்களது நீதி நியாயத்திற்கான குரல்களை, காவல்துறை (பொலிஸ்) கரம்கொண்டு அடக்கித் தீர்வைக் காண முயல்வது நாட்டை மீண்டும் அழிவுக்கே இட்டுச் செல்வதாக அமையும்.

– இவ்வாறு 'குரலற்றவர்களின் குரல் அமைப்பு' தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கடந்தவாரம் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மாகாணத்திற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அதன் ஒருகட்டமாக, 5 ஆம் திகதியன்று வவுனியாவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார்.

அதன்போது, வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் ஜனாதிபதியை நேரில் சந்தித்து, 'ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் செய்யப்பட்ட தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நடந்தது?' என்பதற்கான பதிலை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுப்பதற்காக அங்கு சென்றிருந்தனர்.

எனினும், அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு அவர்கள், காவல் துறையினரால் வழிமறிக்கப்பட்டார்கள்.

அதன்போது, ஜனநாயக நாட்டில் தமக்கு மறுக்கப்பட்ட அடிப்படை உரிமையை ஆட்சேபித்து, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அவ்விடத்தில் நின்றவாறு அகிம்சை வழியில் தமது எதிர்ப்பை பதிவுசெய்ய முட்பட்டிருந்தனர்.

அச்சந்தர்ப்பத்தில், கவனவீர்ப்பில் ஈடுபட்ட தாய்மாரை சினங்கொள்ளச்செய்து, அங்கு வலிந்ததொரு அமைதியின்மையை தோற்றுவித்த காவல்துறையினர், கைகளில் ஒப்படைத்த தம் உறவுகளுக்கு நீதி கேட்டு தெருப்போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் பாதிக்கப்பட்டவர்களை மனிதநேயமற்ற முறையில் பலவந்தமாக அடக்கி ஒடுக்கி பஸ்ஸுக்குள் இழுத்துச் சென்று அடாவடியாக கைதுசெய்துள்ளனர்.

இது மிக மோசமானதொரு உரிமை மறுப்பாகும். இது போன்ற ஜனநாயக விரோதங்கள், நாட்டினுடைய எதிர்கால முன்னேற்றத்திற்கு குந்தகத்தை ஏற்படுத்தவல்லன.

ஜனநாயகப் பெயர் பொறிக்கப்பட்ட இலங்கை தேசத்தினுடைய ஆளுகைத் தரப்பின் ஒற்றை வாக்குறுதிக்கு மதிப்பளித்து, தமது உற்றச் சொந்தங்களை உயிர்ப்புடன் கையளித்த உறவுகள், தம் அன்பிற்குரியவர்களை மீளத்தருமாறு, அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது எனக் கேட்டு 14 ஆண்டுகாலமாக தொடர் போராட்டங்களை நடாத்தி



வருகிறார்கள்.

அந்தப் போராட்டங்களில் பங்கெடுத்த வயோதிபப் பெற்றோர்களில் பலர் உடல், உள ரீதியில் பாதிக்கப்பட்டு உயிர்நீத்துள்ளார்களே தவிர, இவர்களுக்கு இதுவரை நீதிகிட்டவில்லை.

இதுபோன்று, போரின் பெயரில் படுகாயப்படுத்தப்பட்ட பல்வேறு மனக்காயங்களுக்கு மருந்திட வேண்டிய ஆட்சியாளர்கள், அதனைச் செய்ய முயற்சிக்காது மென்மேலும் காயங்களை ஏற்படுத்திக்கொண்டு உதட்டளவில் நல்லிணக்கம் பற்றிப் பேசுவது முரண்நகையானது.

பாதிக்கப்பட்ட குடிமக்களது நீதி,நியாயத்திற்கான குரல்களை, காவல்துறை கரம்கொண்டு அடக்கி தீர்வினைக் காண்பதனூடாக நாட்டை மீண்டும் அழிவுக்கே இட்டுச் செல்வதாக அமையும்.

எனவே, நீதிகோரி குரலுயர்த்திய, வவுனியா வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி சி.ஜெனிற்றா காவல் துறையால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவரை உடனடியாக விடுவிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினராகிய நாம் மனிதநேய சிவில் அமைப்பென்ற வகையில் வலியுறுத்தக் கடமைப்படுகிறோம்.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து, கருத்துச் சுதந்திரத்திற்கு செவிசாய்த்து, ஜனநாயக பண்புடைய உணர்வு வெளிப்பாடுகளுக்கான தடைகளை அகற்றி, நடந்து முடிந்த யுத்தத்திற்கான காரண காரியங்களை கண்டடைந்து, அவற்றுக்குத் தாமதமற்ற தீர்வைக் காண்பதன் மூலமே நாட்டில், உண்மையான நல்லிணக்கத்தை உறுதிசெய்யமுடியும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறோம்.– என இந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.






# சாயி பாபா மத்திய நிலையத் தலைவர் உதயநாயகனின் சேவைக்கு கௌரவம்

சமூக சேவா திலகம் எஸ்.என்.உதயநாயகன், கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று, 23 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, வியாழக்கிழமை அன்று சாயி நிலையத்தினர் அவரின் சேவையைப் பாராட்டி கௌரவித்தனர்.

நிகழ்வில் சாயி நிலைய உபதலைவர் சிவா இராஜஜோதி, பொருளாளர் எஸ்.தவகுமார், சாயி மகளிர் சங்கத் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன் மற்றும் சாயி சமூக சேவை அமைப்பாளர் ஆர்.நாராயணசாமி நாயிடு ஆகியோரும் பங்கேற்றனர்.

தமிழ்ப் பத்திரிகை உலகின் ஜாம்பவான் என்று மதிக்கப்படும் அமரர் எஸ்.டி.சிவநாயகத்தின் மூத்த புதல்வரான எஸ்.என்.உதயநாயகன், தமது தந்தை முன்நின்று ஸ்தாபித்த சாயி மத்திய நிலையத்தின் தலைமைப் பொறுப்பை தந்தையின் வழியில் தொடர்ந்து பொறுப்பேற்று சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்தப் பதவியில் தொடர்ந்து நீடிப்பதற்கு பகீரதப் பிரயத்தனம் பண்ணுகின்றார், அதற்காகக் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்த விடாமல் வருடக்கணக்காக இழுத் தடித்து வருகின்றார் என்பவை எல்லாம் சந்தி சிரிக்கும் விடயங்கள்.

எனினும்,கட்சி மாநாட்டை நடத்த விடுவதில்லை என்பதில் மானம் – ரோஷம் இல்லாமல், ஒரே முனைப்பாக நிற்கின் றார் அவர்.

ஏற்கனவே கட்சியின் மத்திய குழு மூன்று, நான்கு தடவைகள் கூடித் தேசிய மாநாட்டுத் திகதி குறித்து நிச்சயம் செய்து விட்டது.

கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தி னால் புதிய தலைவர் தெரிவாகி, அந்தப் பதவி தம்மை விட்டுப் போய்விடுமே என்ற ஏக்கத்தில் மாநாட்டை நடத்தாமல் குழப்புவதற்கான தகிடுதத்தங்களைத் தொடர்ந்து செய்தபடி இருக்கின்றார் அவர்.

திருகோணமலை மாவட்டக் கிளை தொடர்பில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நடந்த தெரிவு சம்பந்தமாக, கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தன் இப்போது ஆட்சேபித்து இருக்கிறார் என்று காரணம் காட்டி, தேசிய மாநாட்டை மேலும் ஓர் ஆறு மாதங்களுக்கு ஒத்தி வைக்க சதித்திட்டம் தீட்டினார் மாவையர்.

ஏற்கனவே இம்மாத இறுதியில் நடக்க ஏற்பாடாகிவிட்ட தேசிய மாநாட்டை குழப் புவதற்காக நேற்று முன்தினம் கொழும்பில் சம்பந்தன் வீட்டில் கட்சியின் அரசியல் குழுவைக் கூட்டினார் மாவையர். ஆனால் அவர் எதிர்பார்த்தது அங்கு நடக்க வில்லை. திட்டமிட்ட தினத்தில் மாநாட்டை நடத்தி முடிக்க வேண்டும் என்ற கருத்தை சம்பந்தனும் ஆமோதித்தார்.

தேசிய மாநாட்டை ஒத்திவைக்க வேண் டும் என்று கூட்டத்தில் மாவை புலம்பி கொண்டிருக்க, அவரை மீறி குறிப்பிட்ட தினத்தில் தேசிய மாநாட்டை திட்டமிட் டபடியே நடத்தி முடிப்பது என்று அரசி யல் குழு பெரும்பான்மையினர் முடிவில் தீர்மானித்தது.

அத்தோடு சர்ச்சை முடிந்தது, தேசிய மாநாடு திட்டமிட்டபடி நடக்கும் என்று எல் லோரும் எதிர்பார்த்தாலும், மாவையின் பதவி ஆசை விடுவதாக இல்லை.

'தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் மரத்தில் ஏறி, அதில் தொங்கும் உடலை கீழே விழுத்தி, பின்னர் அதைத் தோளில் சுமந்து கொண்டு நடக்க ஆரம்பித்தான்...!' என்ற விக்கிரமாதித்தன் கதை போல, கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முன்னோடியான தலைவர் தெரிவுக்குரிய வாக்கெடுப்புக்கு இன்னும் எட்டு நாள்கள் இருக்கையில், மாநாட்டைத் தள்ளிப் போட வைக்கும் அடுத்த கட்ட நகர்வைச் சளைக்காமல் ஆரம்பித்திருக்கின்றார் மாவையர்.

தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு வைக் கூட்டி, மாநாட்டை தள்ளி போட வைக்க எடுத்த முயற்சி தோற்றுப் போன பின்னணியில், இப்போது கட்சியில் மத் திய குழுவைக் கூட்டியாவது மாநாட்டை ஒத்திப்போட வைக்கும் ஒரு முடிவை எடுக்க முடியாதா என்ற நப்பாசையில் அவர் காய் நகர்த்துகின்றார் என்று தெரிகிறது.

ஓரிரு நாள் முன்னறிவிப்போடு கட்சி யின் மத்திய குழுவைக் கூட்டுமாறு அவர் பதில் பொதுச் செயலாளரைப் பணித்த போதும், அதற்கு அப்பதவியில் இருக்கும் மருத்துவர் சத்தியலிங்கம் இணங்க வில்லை என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இப்போது ஏன் இடையில் ஒரு மத்திய குழுக் கூட்டம் என்று பதில் பொதுச் செய லாளர் சீறினார் என்றும் ஒரு தகவல் உண்டு.

பதவி ஆசை – பித்து – மனிதரில் வெட்கம், ரோஷம், மானம் எல்லாவற்ற தையும் துறந்து, அவரைப் பைத்தியமா கச் செயல்பட வைத்துவிடும்.

கழுதை தேய்ந்து கட்டறும்பானமை போல, உலக்கை தேய்ந்து உளிப்படியான கதை மாதிரி... இலங்கை தமிழரசுக் கட்சி, குறுகிக் குன்றிப் போனமைக்கு வயோதிபத் தலைவர்களின் பதவியாசைப் பித்துதான் பிரதான காரணம் என்பது இப்போது அப்பட்டமாகி வருகின்றது.

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர்கள் படுகொலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும், சிங்களவர்கள் படுகொலை தொடர்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ வும் பரஸ்பரம் கேள்விக்கணைகளைத் தொடுத்து காரசாரமாகத் தர்க்கம் செய்த நிலையில் இறுதியில் மேற்கண்டவாறு கூட்டமைப்பினரைத் தூற்றினார் நீதி அமைச்சர்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தி னம் நடைபெற்ற நீதிமன்றம், நியாய சபை அல்லது நிறுவனமொன்றை அவம தித்தல் சட்டமூலம் உள்ளிட்ட நீதிமன்றத் துடன் தொடர்புடைய ஐந்து சட்டமூலங் கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய சிறிதரன் எம்.பி., நீதி அமைச்சரால் நேற்றுமுன்தினம் சபைக்குச் சமர்ப்பிக்கப் பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக் குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததுடன் கடுமையாக அதனை விமர்சித்தார்.

சிறிதரன் எம்.பி.யின் உரை முடிந்த வுடன் எழுந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ,

"பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் இருப்பதால்தான் நாட்டில் படுகொலைகள் இடம்பெறுகின்றன என்று கூறுகின்றீர் கள். உலகில் பயங்கரவாதத் தடைச் சட் டம் இல்லாத நாட்டைக் குறிப்பிடுங்கள் பார்க்கலாம்." – என்றார்.

இதற்குப் பதிலளித்த சிறிதரன் எம்.பி.,

"சகல நாடுகளிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளது. ஆனால், இலங்கை யில் மட்டும்தான் இந்தச் சட்டமூலத்தின் ஊடாக தமிழ் இனம் கொடுமையாக அழிக் கப்பட்டுள்ளது. உலக நாடுகளில் பயங்கர வாதத் தடைச் சட்டங்கள் சொந்த மக்களை யும், ஏனைய இனத்தையும் அழிப் பதற்குப் பயன்படுத்தப்படவில்லை." – என்றார்.

இதனால் சீற்றமடைந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ,

"பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் இருந்ததால்தானா பிரபாகரன் துரையப் பாவைப் படுகொலை செய்தார். தமிழர்கள் மாத்திரமல்ல சிங்களவர்களும் ஏற்றுக் கொண்ட தமிழ்த் தலைவரான லக்ஷ்மன் கதிர்காமரையும் அவர் படுகொலை செய் தார். முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வன் ஆகியோரைப் படுகொலை செய்தது யார்? தலதா மாளிகை, மத்திய வங்கி மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு அப்பாவி மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். இது சரியானதா? பயங்கரவாதச் செயற்பாடு களுக்கு எதிரான பயங்கரவாதத் தடைச் சட் டத்தை மாத்திரம்தான் நீங்கள் எதிர்க் கின்றீர்கள்

முன்னாள் எம்.பி.ஆனந்த சங்கரி ஒரு முறை எனது வீட்டுக்கு என்னைத் தேடி ஓட்டோவில் வந்தார். வெள்ளவத்தையில் உள்ள அவரது வீட்டின் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்று கூறினார். பின்னர் நான் அவரை அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிடம் அழைத்துச் சென்று அவரது பாதுகாப்பை உறுதிப் படுத்தினேன். ஆனால், அவரது மகன் ஹரி ஆனந்தசங்கரி கனடாவில் பிரதி அமைச்சராகப் பதவி வகித்துக்கொண்டு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும், இலங்கைக்கு எதிராகவும் கருத்துக்களை கூறுகின்றார். .

பயங்கரவாதத் தடைச் சட்டம் இருந்த காரணத்தால்தான் நீங்களும் தப்பி யுள்ளீர்கள். தேசிய பாதுகாப்பை எக்கார ணிகளுக்காகவும் பலவீனப்படுத்த முடி யாது. இங்கு சிங்கள அரசு, தமிழ் அரசு என்பதொன்று கிடையாது. ஸ்ரீலங்கா அரசே நடைமுறையில் உள்ளது. ஆகவே, முட்டாள்தனமான கருத்துக்களைக் கூற வேண்டாம். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் உங்களைப் போன்றவர்கள் இருக்கும் வரை வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு விமோசனம் கிடையாது. நீங் களே தமிழ்ச் சமூகத்தின் சாபக்கேடு." – என்றார்.

இதன்போது எழுந்து சிறிதரன் எம்.பி.,

"முட்டாள்தனம் என்று அமைச்சர் தன் னைத்தானே முட்டாள் எனக் கூறுவதனை வரவேற்கின்றேன். பிரபாகரன் இருந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 22 பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இருந்தார்கள் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். 1954 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காலிமுகத்திடலில் தந்தை செல்வா ஜனநாயக வழி போராட் டத்தில் ஈடுபட்டபோது யார் அவரைத் தாக் கிக் கடலில் தூக்கிப் போட்டது?

திருகோணமலை – கந்தளாய் பகுதி யில்சிங்களப்பொலிஸார்பார்த்துக்கொண் டிருக்க 154 விவசாயிகளைப் படுகொலை செய்தது யார்? அப்போது தமிழர்கள் யாரும் ஆயுதம் ஏந்தவில்லை. தமிழர் பகுதியில் பல தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இந்த மண்ணில் தமி ழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது நீங்கள் கண்ணை மூடிக் கொண்டா இருந்தீர்கள்? எம்மை முட்டாள் என்று குறிப்பிடும் நீதி அமைச்சரே முட்டாள். இந்த நாட்டில் உங்களின் இனவாதத்தால் தான் ஆயுதம் எம் மீது திணிக்கப்பட்டது. தவறுகளைத் திருத்திக்கொள்ளுங்கள்." – என்றார்.

இதனையடுத்து மீண்டும் எழுந்த நீதி அமைச்சர்,

"சிறிதரன் எம்.பி. 1954 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கூறினார். அப்போது நான் பிறக்கவில்லை. தமிழர்கள் கொல்லப்பட் டார்கள் என்று அவர் குறிப்பிடுகின்றார். அக்காலப்பகுதியில் எல்லைக் கிராமங்க ளில் வாழ்ந்த சிங்களத் தாய்மார்கள் படு கொலை தென்பகுதியில் எத்தனை குண்டு வெடிப்புக்களை நடத்தி ஆயிரக்கணக் கான மக்களைக் கொன்றவர்கள் நீங்கள். தலதா மாளிகையைக்கூட நீங்கள் விட்டு வைக்கவில்லை. இப்படி உங்களின் பல படுகொலைகளை எங்களினாலும் பட்டிய லிட முடியும்.

இந்துத் தலைவர்களை அழிக்க வேண் டும் என்ற கொள்கையுடன்தான் பிரபாக ரன் நூற்றுக்கும் அதிகமான தமிழ்த் தலை வர்களைப் படுகொலை செய்தார். இரா ணுவத்தினர் எவரையும் படுகொலை செய்யவில்லை. திராவிட தமிழ்க் கட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு இவர்கள் ஆரம்ப காலத்தில் வேறு நோக்கத்துடன் அரசியல் கட்சிகளை ஆரம்பித்தார்கள். இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களவர்கள் இணக்கமாக வாழ்வதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரும்பு வதில்லை. அனைத்துக்கும் எதிர்ப் புத் தெரிவிப்பதைப் பிரதான கொள் கையாகக் கொண்டுள்ளார்கள்." – என்றார்.

# மஹிந்தவைச் சந்தித்த புதிய இந்தியத் தூதுவர்





இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று மாலை சந்தித்தார். இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் எம்.பியும் கலந்துகொண்டார்.



## தந்தையும் மகனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவிட்டார்.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் குகதுலராஜா (குகன்) மற்றும் அவரது மகன் ஆகியோர் வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் மாவீரர்களுக்குவிளக்கேற்றி அஞ்சலி செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருக்குக் காலில் ஏற்பட்ட பாரிய காயம் காரணமாக அவர் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, மாவட்ட அமைப்பாளர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால் அவர் நீதிமன்றில் ஆஜராகாத நிலையில் அவரது மகன் ஆஜராகி இருந்தார்.

கொழும்பில் இருந்து வருகை தந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், கைது செய்யப்பட்டவர்களுக்கும் புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளமை அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளில் இருக்கும் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது என்று தெரிவித்தனர். இதையடுத்து சந்தேகநபர்கள் இருவரையும், மேலதிக விசாரணைக்காகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்க அனுமதியளித்த நீதிவான், அவர்கள் இருவருக்கும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலையும் நீடித்து உத்தரவிட்டார்.

## ஆளுங்கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடுக்கடலுக்குச் சென்று விருந்துபசாரம் நடத்துகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

"ஜனவரி மாதம் பாடசாலை மாணவர்களுக்கான சீசன் டிக்கெட்டுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ள வேளையில், வற் வரி விதிப்பால் மக்கள் பல்வேறு அழுத்தங்களுக்கும் அல்லல்களுக்கும் உள்ளாகியுள்ள இவ்வேளையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நாடாளுமன்றத்தில் அரசுடன் தொடர்புடைய அமைச்சர்கள் குழுவொன்று துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான ஹன்ஸகாவா மற்றும் தியா கொவுல்லா ஆகிய இரண்டு கப்பல்களைப் பயன்படுத்தி கடந்த இரு நாள்களுக்கு முன்பு கடலில் விருந்துபசாரக் கொண்டாட்டமொன்றை நடத்தியுள்ளனர், இதற்குத் துறைமுக அமைச்சர் எழுத்து மூல அனுமதியும் வழங்கியுள்ளார்.

நாடு வங்குரோத்தாகிக் கிடக்கும் இவ்வேளையில் மதுபானம், துறைமுகத்தில் உள்ள உணவகத்தில் இருந்து உணவு குடிபான வகைகளை கூடப் பெற்றுக் கொண்டு, நாட்டுக்குச் சொந்தமான கப்பல்களைப் பயன்படுத்திக் கொண்டு எரிபொருளை விரயம் செய்வதும், நடுக்கடலில் விருந்து நடத்தி கொண்டாட்டம் நடத்த, கும்மாளமடிக்க முடியுமா என்பதும் பிரச்சினைக்குரிய விடயம்.

அமைச்சர்களின் தனிப்பட்ட செலவில் இந்த விருந்துபசாரங்களை நடத்துவது பிரச்சினையல்ல என்றாலும், அரச வளங்களைப் பயன்படுத்தி இவ்வாறான விருந்துபசாரங்கள் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது." – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் மிதப்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவாரா, இல்லையா என்பதை இன்னும் தாம் அறிவிக்கவே இல்லை என்று அண்மையில் கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இப்போது அடுத்த ஜனாதிபதி தேர்தல் செப்டம்பரில் என்றும், தொடர்ந்து அடுத்த ஜனவரியில் பொதுத் தேர்தல் நடக்கும் என்றும் தனது ஐ.தே. கட்சியின் உள்ளகக் கூட்டம் ஒன்றில் அறிவித்திருக்கிறார்.

ஐ.தே.கட்சி தலைமையிலான கூட்டணியின் வேட்பாளராக அவரே அந்தத் தேர்தலில் களமிறங்குவார் என்று கட்சி தீர்மானித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக்கால அறிவிப்புகள் பலவும் அடுத்த ஜனாதிபதி தேர்தலின் பின்னரும் தாமே இந்தப் பதவியில் இருப்பார் என்ற மிதப்புத் தொனிப்படவே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இலங்கையில் ஜனாதிபதிப் பதவியில் இருந்தபடி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு, தோல்வியுற்ற ஒரே பிரமுகர் மஹிந்த ராஜபக்ஷதான். 2015 ஜனாதிபதி தேர்தலில் அந்த அனுபவம் அவருக்கு நேர்ந்தது. அப்போதும் கூட, அந்தத் தேர்தலின் பின்னர் தாமே ஜனாதிபதி என்ற மிதப்புடன்தான் மஹிந்த ராஜபக்ஷ நடந்து கொண்டார். அப்படித்தான் இப்போது ரணில் விக்கிரமசிங்கவும் நடந்து கொள்கின்றார் என்று தோன்றுகின்றது.

ஜனாதிபதிப் பதவியில் இருப்பவர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் போது, நாடாளுமன்றம் கலையும் தினம், பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நாள்கள், வாக்களிப்பு தினம், புதிய நாடாளுமன்றம் கூடும் தினம் ஆகிய நான்குக்குமான திகதிகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு அதற்கான பிரகடனத்தை வெளியிட வேண்டும் என்று 1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கத் தேர்தல்கள் திருத்த சட்டத்தின் பத்தாம் அத்தியாயம் கூறுகின்றது.

இதன்படி, நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்தில் இருந்து 10 முதல் 17 நாள்கள் வரை வேட்பு மனுக்கள் ஏற்றல் இடம் பெற வேண்டும். அதிலிருந்து நான்கு வாரங்களுக்குக் குறையாமலும் ஆறு வாரங்களுக்குக் கூடாததுமான ஒரு தினத்தில் வாக்களிப்பு இடம் பெற வேண்டும்.

அதாவது, ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து ஆகக்கூடியது இரண்டு மாதங்களுக்குள் பொதுத்தேர்தல் நடந்து விடும். நடந்துவிட வேண்டும்.

இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றமைப் போல அடுத்த ஜனவரியில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால் பதவியில் இருக்கும் ஜனாதிபதி நவம்பர் மாதத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொது தேர்தலுக்கு உத்தரவிட்டால்தான் அது சாத்தியமாகும்.

அப்படி வரும் நவம்பரில் தற்போதைய நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு அந்த மாதத்தில் தாமே ஜனாதிபதியாக இருப்பார் என்ற அடிப்படையில்தான் அடுத்த ஜனவரியில் பொதுத் தேர்தல் என்று ரணில் அறிவித்திருக்கின்றார்.

அவரின் தற்போதைய ஜனாதிபதிப் பதவிக்காலம், இந்த ஆண்டு செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கும் இடையில் ஒரு நாளில் நடத்தப்பட வேண்டிய - நடத்தப்பட போகின்ற - அடுத்த ஜனாதிபதி தேர்தலின் முடிவு அறிவிப்போடு காலாவதியாகிவிடும்.

அதற்குப் பிறகான ஒரு தினத்தில் நாடாளுமன்றத்தை கலைக்கும் ஒரு தீர்மானத்தை அவர் எடுத்து, அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதாயின் அச்சமயத்திலும் அவரே ஜனாதிபதியாக இருக்க வேண்டும்.

ஆக, வரப்போகின்ற ஜனாதிபதி தேர்தலில்வென்று, அதற்குப்பின்னர்நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத்தேர்தலுக்கு வழி செய்வேன் என்பதை அடுத்த ஜனவரியில் பொதுத் தேர்தல் என்ற தமது அறிவிப்பு மூலம் அவர் வெளிப்படுத்த எண்ணுகின்றார் என்று தோன்றுகின்றது.

1999 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிட்டு தோற்றவர் அவர். 2010,2015,2019 ஜனாதிபதித் தேர்தல்களில் பிறருக்கு இடமளித்து, அந்த ஜனாதிபதித் தேர்தல்களில் வெறும் பிரசாரப் பிரமுகராகவே அவர் செயல்பட்டார்.

இப்போதும் கூட, தேசிய பட்டியல் மூலம் பின் கதவால் நாடாளுமன்றத்துக்குள் புகுந்து, நாடாளுமன்றில் பிற கட்சிகளின் தயவில் ஜனாதிபதியானவர் அவர்.

அவர் இப்போது தானே அடுத்த ஜனாதிபதி என்ற மிதப்பில் துள்ளிக் குதிக்கின்றார். அது சாத்தியமாகுமா என்பது தெரியவில்லை.



# பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற இலங்கை முழு அர்ப்பணிப்புடன் செயற்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

பாலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் இரு நாட்டு கொள்கைத் திட்டத்தை சாத்தியமாக்குவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 தூதுவர்களுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடை பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நிலையானதும் செயலூக்கமானதுமான பாலஸ்தீன அரசாங்கத்தை நிறுவி, மேற்குக் கரைப் பகுதிகளில் தஞ்சம் புகுந்திருப்பவர்களை நிரந்தரமாக குடியமர்த்த அவசியமான நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும் காசா எல்லைப் பகுதிகளுக்கு இலங்கையின் உதவிகளை வழங்கவிருப்பதாகவும் அப்பகுதிக்கான மனி தாபிமான உதவிகளை தொடர்ச்சியாக வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இதன்போது பாலஸ்தீன் மற்றும் காசா எல்லைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கும் ஒத்துழைப்புக்கு மத்திய கிழக்கு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட தூதுவர்கள் நன்றி தெரிவித்தனர்.





காசா எல்லையின் போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து ஐக்கிய நாடுகளின் பரிந்துரைக்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்பையும் உறுதிப்பாட்டையும் தூதுவர்கள் பாராட்டினர்.

அதேபோல் செங்கடலின் பாதுகாப்பு முயற்சிகள் தொடர்பில் வலியுறுத்திய ஜனாதிபதி, இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் கடல்வழி போக்குவரத்தில் இருக்க வேண்டிய சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையி லேயே இலங்கை மேற்படி முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்து வருவதாகவும் தெரிவித்தார்.



இதன்போது மேற்குலக நாடுகளுடன் காணப்படும் தொடர்புகளுக்கு மேலதிகமாக ஆசியா, மேற்கு ஆசியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு உள்ளிட்ட வலயங்களுடனான தொடர்புகளை பலப்படுத்திக்கொள்ள இலங்கை எதிர்பார்த் திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் விரிவான வெளியுறவுக் கொள்கை தொடர்பி லும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இந்த மூலோபாய பிரவேசம் இராஜதந்திர தொடர்புகள், வலயத்தின் நிலைத்தன்மை பாதுகாப்புக்கான இலங்கை யின் ஒத்துழைப்பை வெளிகாட்டுவதாக அமைந்துள்ளது.

இதன்போது இலங்கைக்கான பாலஸ்தீன தூதுவர் தலை மையில், எகிப்து, கடார்,ஐக்கிய அரபு இராச்சியம், லிபியா, ஈரான், குவைத், சவூதி அரேபியா, ஓமான் மற்றும் ஈராக் உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்கள் கலந்துகொண்டிருந் தனர்

# பாலர் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் காலை உணவு

## இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவிப்பு



"நாட்டிலுள்ள அனைத்துப் பாலர் பாடசாலை மாணவர்களுக்கும்காலைஉணவுவழங்கும்வேலைத்திட்டம்இவ்வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படும்."

– இவ்வாறு மகளிர், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாட்டின் 120,000 பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவை வழங்குவது சவாலாக அமைந்திருந்தது. அந்த வகையில் தற்போது மாணவர் ஒருவருக்காக ஒதுக்கப்படும் தொகையை 60 ரூபாய் முதல் 100 ரூபா வரையில் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையின் பெருமளவான மாணவர்கள் போசாக்கு குறைப்பாட்டிற்கு ஆளாகியுள்ள நிலையில் புரோட்டின் நிறைந்த போசாக்கான உணவை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமையவே நாட்டிலுள்ள அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் திட்டத்தை செயற்படுத்தவிருக்கின்றோம். தோட்ட பாடசாலைகள் தவிர்ந்த பாலர் பாடசாலைகளில் மட்டும் 120,000 மாணவர்கள் இருகின்றனர் . தோட்ட பாலர் பாடசாலைகளிலிருக்கும் 35,000 மாணவர்களும் உள்ளடங்களாக 155,000 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன்பெறுவர்.

அதேபோல் கர்ப்பிணித் தாய்மாருக்கான போசாக்குப் பொதிகளை வழங்க எதிர்பார்த்திருகின்றோம். அதற்காக 220,214 கர்ப்பிணித் தாய்மாருக்கு 4,500 ரூபா பெறுமதியான போசாக்கு பொதிகளை 10 மாதங்களுக்கு வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

மேலும் பாலர் பாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கபடவுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் பாலர் பருவகால மேம்பாடு தொடர்பிலான தேசிய செயலாளர் அலுவலகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் 18,333 பாலர் பாடசாலை ஆசிரியர்கள் உள்ளனர்.

அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். பாலர் பாடசாலைகளை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 2500 ரூபாவை வழங்கவும், அது போதுமான தொகை இல்லை என்பதால் அதனை மேலும் அதிகரிக்கவும் எதிர்பார்த்துள்ளோம்." –என்றார்.

# மத்திய வங்கி ஆளுநர் மீது எமக்கு நம்பிக்கையில்லை

## லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



"நாட்டின் நிதி நிலைமை குறித்து மத்திய வங்கியின் ஆளுநர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை. உண்மையை மூடி மறைத்தார். ஆகவே மத்திய வங்கி ஆளுநர் மீது எமக்கு நம்பிக்கையில்லை."

– இவ்வாறு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாடு வங்குரோத்தடைந்துள்ளது என்று மத்திய வங்கி ஆளுநர் ஒருபோதும் இந்த நாடாளுமன்றத்திற்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. நாட்டின் நிதி நிலைமையின் உண்மையை அவர் மூடி மறைத்தார்.

நிதி நிலைமை தொடர்பில் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

அப்போது கையிருப்பு எவ்வளவு இருக்கின்றது என்று கேட்டேன். 20 மில்லியன் டொலர்கள் இருப்பதாக கூறினார். அப்போதே நாடு வங்குரோத்தடைந்துள்ளது என்பதனை அறிந்துகொண்டோம். எனவே அவ்வாறான மத்திய வங்கி ஆளுநர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை."– என்றார்.




# மஹிந்த உள்ளிட்ட குழுவுக்கு நடுக்கடல் விருந்துக்கு 25 இலட்சம் ரூபா செலவா?

## மறுக்கின்றார் இராஜாங்க அமைச்சர் பிரேமலால்



"கப்பல் பயணத்துக்கு எனது சொந்தப் பணத்தையே செலவளித்தேன். 25 இலட்சம் ரூபா செலவளித்து விருந்துபசாரம் நடத்தப்பட்டது எனக் கூறப்படும் கதையெல்லாம் போலியானவை."

– இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு நடுக்கடலில் விருந்துபசாரம் நடத்தப்பட்டுள்ளது எனவும், மது விருந்துகூட இருந்துள்ளது எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இவற்றை இராஜாங்க அமைச்சர் முற்றாக நிராகரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"25 இலட்சம் ரூபா எனவும், கோடிக் கணக்கல் செலவளிக்கப்பட்டது எனவும் தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் கூறுகின்றார். இல்லை, சென்வீச், ரோல்ஸ் உள்ளிட்டவைக்கு 14 ஆயிரம் ரூபா வரையே செலவளிக்கப்பட்டது. அதுவும் எனது சொந்தப் பணம்.

இந்தக் கண்காணிப்புப் பயணத்துக்கு மொத்தம் 3 இலட்சம் ரூபாதான் செலவானது. தேவையெனில் எரிபொருள் செலவையும் வழங்கத் தயார்." – என்றார்.

# கைதுகள் மூலம் அப்பட்டமான ஜனநாயகப் படுகொலைகள்!

## இலங்கை அரசைக் கண்டிக்கின்றது யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம்




கைதுகள் மூலம் அப்பட்டமான ஜனநாயகப் படுகொலைகளை இலங்கை அரசு தொடர்ந்தும் நிகழ்த்தி வருகின்றது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் கு.துவாரகன், செயலாளர் சோ.சிந்துஜன் ஆகியோரின் ஒப்பத்துடன் வெளியாகியுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–


"கடந்த வாரம் இலங்கை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குக்கான பயணத்தின் போது அறவழியில் போராடிய வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையை மாணவ சமுதாயமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டிப்பதோடு, அப்பட்டமான ஜனநாயக உரிமை மீறலாகவும் இதனைப் பதிவு செய்கின்றது.

அனைத்துலகச் சமூகத்தின் முன்னால் ஜனநாயக உரிமைகள் வழங்கப்படுவதாக ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு, அறவழியில் போராடிய மக்களின் உரிமையினை கிஞ்சித்தும் பொருட்படுத்தாது கைதுகள், விசாரணைகள் மூலமாக அடக்கியொடுக்குவதற்கு முயலும் இந்த இலங்கை அரசின் போக்குகள் உலக அரங்கின் முன்னால் வெட்ட வெளிச்சமாக்கப்பட வேண்டியவையாகும்.

இலங்கை அரச படைகளால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமானதும் நீதியானதுமான பதிலொன்றைக் கூறுவதற்கு இயலாத அரசு, அவற்றுக்கான பதில் கோரிப் போராடும் உறவுகளை இன்று வரையில் வீதியில் விட்டுள்ளதோடு, அவர்களுக்கான பரிகாரநீதியையும் மறுத்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில்தங்கள் உறவுகளுக்கு நேர்ந்த கதிக்கு பதில் கோரி அறவழியில் போராடும் உறவுகளின் போராடும் உரிமையையும் கருத்துரிமையையும் அடக்கியொடுக்கும் செயற்பாடாகவே வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றாவின் கைது நோக்கப்பட வேண்டியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகக் குரல் கொடுத்து வரும் இன்னபிற செயற்பாட்டாளர்கள், உறவினர்களைப் புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட அரச படைகள் அச்சுறுத்தும் போக்கும் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றது என்பது யாவரும் அறிந்ததே! இது போன்ற அப்பட்டமான ஜனநாயக மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் இலங்கை அரசு உதட்டளவில் நல்லிணக்கம் பேசும் செயல்களில் ஈடுபடாமல், உளச்சுத்தியுடன் நிலையான நல்லிணக்கத்தை எட்டுவதற்கு முயல வேண்டும். தமிழ் மக்களை ஓரவஞ்சனையுடன் வஞ்சித்து விட்டு நல்லிணக்கம் பற்றிய உரையாடல்களை மேற்கொள்வதென்பது 21ஆம் நூற்றாண்டில் நவீன வடிவில் அடிமைத்தனத்தை தமிழ் மக்கள் மீது திணிக்க முயல்வதாகும்." – என்றுள்ளது.

# பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்குடன் இந்திய பாதுகாப்பு அமைச்சர் சந்திப்பு!



இந்தியா – பிரித்தானியா இடையேயான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விரைவில் முடிவு எட்டப்படும் என்று பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக்கைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மூன்று நாள்கள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு, கடந்த 8 ஆம் திகதி பிரித்தானியா சென்ற ராஜ்நாத் சிங் லண்டனில் உள்ள மகாத்மா காந்தி, அம்பேத்கர் நினைவிடங்களுக்குச் சென்று மரியாதை செலுத்தியிருந்தார்.

அந்த நாட்டின் இராணுவ அமைச்சர் கிராண்ட் ஷாப்ஸ் மற்றும் வெளியுறவுச் செயலர் டேவிட் கேமரூன் ஆகியோரைச் சந்தித்த ராஜ்நாத் சிங், இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு, இராணுவ தளவாடங்கள் உற்பத்தி, தொழில்துறை ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இந்த நிலையிலேயே பிரிதமர் ரிஷி சுனக்கையும் ராஜ்நாத் சிங் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 22 ஆண்டுகளில் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஒருவர் பிரித்தானியா செல்வது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பிரித்தானியா – இந்தியா நாடுகள் வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பத் துறைகளில் இணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உடன் சேர்ந்து பிரித்தானிய பிரதமரும் விவாதித்தார். குறிப்பாக பிரித்தானியா – இந்தியா இடையே தற்போது நடந்து வரும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தையில் விரைவில் வெற்றிகரமாக முடிவு எட்டப்படும் என்று பிரித்தானிய பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் இந்தியாவின் வர்த்தக நிறுவனங்களுடன் வணிகம் மற்றும் தொழில்நுட்ப உறவுகளை வலுப்படுத்துவதுவதற்கான அரசின் ஆதரவு உட்பட பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு அரண்களை உறுதிப்படுத்துவதற்கான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து தான் மற்றும் தனது அரசின் ஆர்வத்தை ரிஷி சுனக் வெளிப்படுத்தினார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிஷி சுனக்குடனான சந்திப்பு குறித்து மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்குடன் ஓர் அன்பான சந்திப்பு. அவருடன் பரந்த அளவிலான பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பு கிடைத்தது. நாங்கள் பாதுகாப்பு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பிரச்சினைகள், அமைதியான உலகளாவிய நிலையான விதிகளுக்குட்பட்டு எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுவது என்பது குறித்தும் விவாதித்தோம்" என்று தெரிவித்துள்ளார்.

# ராகுல் காந்தி யாத்திரைக்கு நிபந்தனையுடன் அனுமதி

மணிப்பூரில் ராகுல் யாத்திரைக்கு மாநில அரசு நிபந்தனையுடன் அனுமதி வழங்கியுள்ளது. காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையிலான பாரத ஒற்றுமை யாத்திரையை தொடர்ந்து, மணிப்பூரில் இருந்து மும்பை வரை பாரத ஒற்றுமை நியாய யாத்திரை மேற்கொள்ள இருக்கிறார்.

மணிப்பூரின் இம்பாலில் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடங்கும் இந்த யாத்திரை, மார்ச் 20 ஆம் திகதி மும்பையில் முடிகிறது. 110 மாவட்டங்கள், 100 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 337 சட்டப்பேரவை தொகுதிகள் வழியாக 66 நாட்களில் மொத்தம் 6,713 கி.மீ. தொலைவுக்கு இந்த யாத்திரை நடைபெறுகிறது. இந்த யாத்திரையின் தொடக்க விழாவை கிழக்கு இம்பாலில் உள்ள ஹட்டா காங்ஜெய்புங் அரண்மனை மைதானத்தில் நடத்த மாநில அரசிடம் காங்கிரஸ் கட்சி அனுமதி கேட்டு காத்திருந்தது.

இது தொடர்பாக மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங்கை மாநில காங்கிரஸ் தலைவர் கெய்ஷாம் மேகசந்திரா உள்ளிட்டோர் நேற்று காலையில் சந்தித்தனர்.

இந்த சந்திப்புக்கு பின்னர் கெய்ஷாம் மேகசந்திரா கூறும்போது,

"மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு நிலைமை குறித்த கவலைகளை முதல்வர் காரணம் காட்டி, தனது அரசால் அனுமதி வழங்க முடியாது என கூறிவிட்டார். இது மிகவும் துரதிருஷ்டவசமானது. தொடக்க விழாவை தவுபால் மாவட்டம் கோங்ஜோமில் உள்ள தனியார் இடத்துக்கு மாற்ற இருக்கிறோம்" என்றார்.

இந்த நிலையில் அரண்மனை மைதானத்தில் ராகுல் யாத்திரைக்கு சில நிபந்தனைகளுடன் மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது. குறைந்த எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களுடன் யாத்திரையை கொடியசைத்து தொடங்கும் நிகழ்ச்சி மட்டுமே நடத்த வேண்டும். தொடக்க விழாவில் பங்கேற்பவர்கள் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்களை முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளது.

# இஸ்ரேலின் இனப்படுகொலை வழக்கு சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை!






காசா போரில் குழந்தைகள், அப்பாவி பொதுமக்கள் கொடுத்த விலை அதிகமானது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அண்டனி பிளின்கன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் 3 மாதங்களைக் கடந்து தொடர்ந்து வருகிறது. இந்த நிலையில் பிளின்கன் இஸ்ரேல் சென்றுள்ளார். இந்தப் போர் ஆரம்பித்த பின்னர் அவர் நான்காவது முறையாக இஸ்ரேல் சென்றுள்ளார். இஸ்ரேல் அரசுப் பிரதிநிதிகள் அதிகாரிகளுடன் அவர் போர் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் இந்தச் சந்திப்பு குறித்து அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசினார்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்,

“பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையிலான உதவிகள் சென்று சேர்வதை இஸ்ரேல் உறுதி செய்ய வேண்டும். அதிலிருக்கும் தடைகளை இஸ்ரேல் நீக்க வேண்டும்.

அதேவேளையில் அப்பாவி பொது மக்களுக்கு மத்தியிலேயே ஹமாஸ் குழுவினரும் கலந்துள்ளதால் இஸ்ரேலுக்கு அது சவாலாக இருக்கிறது. நான் இஸ்ரேலியத் தலைவர்களுடனான சந்திப்பில் மனிதாபிமான அடிப்படையில் சென்றுசேர வேண்டிய உதவிகள் பற்றி பேசினேன்.

கடந்த 3 நாள்களாக இஸ்ரேலின் அண்டை நாடுகளில் இருந்து வலிமையான நற்செய்திகள் வருகின்றன. இஸ்ரேலுடன் இயைந்து வாழ விருப்பக் குரல்கள் வருகின்றன. இந்தப் பிராந்திய முழுவதுக்குமான பாதுகாப்பை உறுதி செய்யக் கூடிய முன்னெடுப்பு இது. ஒக்டோபர் 7 ஹமாஸ் தாக்குதலுக்குப் பின்னர் முடங்கிப் போன சமாதானப் பேச்சுகள் துளிர்விடவுள்ளன.

இஸ்ரேலும் பாலஸ்தீன நாடு, பாலஸ்தீன அரசியல் உரிமைகள் ரீதியாக இறங்கிவர வேண்டும்.” – என்றார்.

ஆனால், இஸ்ரேலின் பாதுகாப்பைக் காரணம் காட்டி இத்தகைய சமரசங்கள் நடக்காது என்று பிரதமர் பெஞ்மின் நெதன்யாகு சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

காசாவில் போர் உக்கிரத்தை இஸ்ரேல் குறைத்துவருகிறதா என்ற கேள்விக்குப் பதிலளித்த பிளின்கன்,

“காசாவில் போர் உக்கிரமாக நடப்பதை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வருவதாக இஸ்ரேல் எங்களிடம் ஏதும் தெரிவிக்கவில்லை. அமைதி ஒரே இரவில் திரும்பிவிடாது.

சர்வதேச நீதிமன்றத்தில் வாதாடிய தென்னாபிரிக்கா, இஸ்ரேல் போர்க் குற்றம் புரிந்ததாகக் கூறியுள்ளது. அது ஆதாரமற்றது. ஆனால் காசா போருக்கு குழந்தைகள், அப்பாவி மக்கள் கொடுத்த விலை பெரிது.

காசாவில் 90 சதவீத மக்கள் தீவிர உணவுப் பாதுகாப்பின்மையால் வாடுகின்றனர். நீண்ட நாளகளுக்கு போதிய உணவு இல்லாமல் குழந்தைகள் தவிப்பது அவர்கள் வாழ்க்கையில் ஆறாத தாக்கத்தை ஏற்படுத்திவிடும். அதிக உணவு, அதிகமான குடிநீர், தேவையான அளவில் மருந்துகள், இன்னும் நிறைய அடிப்படைத் தேவைக்கான பொருள்கள் காசாவை சென்று சேர வேண்டும்” என்றார்.

# மாலைதீவு ஜனாதிபதி சீனாவுக்கு விஜயம்: 20 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன



மாலைதீவின் ஜனாதிபதி முகமது மூயிஸ் சீனாவுக்கு 5 நாள்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அவர் சீன ஜனாதிபதி ஜி ஜிங்பிங்கை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது சீனா – மாலைதீவுக்கு இடையே சுற்றுலா, பேரிடர் மேலாண்மை, கடல்சார் பொருளாதாரம், வர்த்தக வழித்தடம் உற்பட பல்வேறு துறைகளில் 20 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை மாலைதீவு ஜனாதிபதி அலுவலகம் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது.

அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி லட்சத்தீவுக்கு விஜயம் செய்திருந்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து மாலைதீவின் அமைச்சர்கள் மூவர் விமர்சித்திருந்ததையடுத்து அவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

சுற்றுலாவை பெரிதும் நம்பியிருக்கும் மாலைதீவுக்கும் இந்தியாவுக்கும் இதன் பின்னர் விரிசல் ஏற்பட்டதையடுத்து மாலைதீவு ஜனாதிபதி சீனாவுடன் 20 ஒப்பந்தங்களில் சுற்றுலா துறையை விருத்தியடைய செய்வதை நோக்கமாக கொண்டு கைச்சாத்திட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரிட்டன் இளவரசி ரணிலுடன் சந்திப்பு

## சந்திரிகாவும் பங்கேற்பு

இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருக்கும் பிரித்தானிய இளவரசி அன்னே மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் ஆகியோர் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த இளவரசி அன்னே உள்ளிட்ட பிரித்தானிய தூதுக் குழுவுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியால் வரவேற்பளிக்கப்பட்டது.

அதனையடுத்து இளவரசி ஆன் உள்ளிட்ட தூதுக் குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவுடன் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினர்.

இந்த நிகழ்வை நினைவுகூரும் விதமாக ஜனாதிபதி மாளிகையிலிருக்கும் விருந்தினர் பதிவேட்டில் இளவரசி ஆன் நினைவுக் குறிப்பொன்றை பதிந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, சுகாதார இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்டவர்களும் இதன்போது கலந்துகொண்டனர்.










# பிரித்தானிய இளவரசி ஆன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

## வடக்கு மாகாண ஆளுநர் வரவேற்பு

இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வருகை தந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் அவரது கணவர் வைஸ் அட்மிரல் சேர் திமோதி லோரன்ஸ் உள்ளிட்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விசேட ஹெலிக்கொப்டர் மூலம் வருகை தந்த இளவரசி, யாழ்ப்பாணம் நாவாந்துறை பொது மைதானத்தில் தரையிறங்கிய போது, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸினால் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதன்போது பிரித்தானிய இளவரசி ஆன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு இடையில் சிநேக பூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.













# கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகளை முகமாலையில் பார்த்தார் இளவரசி ஆன்

நேற்று வடக்கே விஜயம் செய்த பிரித்தானிய இளவரசி ஆனும் அவரது அணியினரும் கிளிநொச்சி முகமாலை பிரதேசத்துக்கு நேற்றுப் பகல் 2.15 மணிக்கு விஜயம் மேற்கொண்டனர்.

கிளிநொச்சி முகமாலைப் பகுதியிலுள்ள மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் அவர் கலந்துரையாடியமையுடன் கண்ணிவெடி அகற்றும் இடங்களையும், கண்ணிவெடி அகற்றப்பட்டு மக்கள் மீள் குடியேறிய இந்திராபுரம் பகுதிக்கும் சென்று பார்வையிட்டார்.





# கிழக்கு நீர் நிலைகளில் நீராடுவதைத் தவிர்க்குக!

## அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள தாழ்வான பிரதேசங்கள் வெள்ள நீரால் நிம்பியுள்ளன.

இந்த நிலையில் ஆறு, குளம் மற்றும் நீரோடைகளில் நீராடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது .

தற்போது நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள அனர்த்த சூழ்நிலையில் நீர் நிலைகள் நிரம்பி வழிகின்றன.

குளங்களது நீர்மட்டம் உயர்வதால் திடீரென்று நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்படுகின்றன. பள்ளமான பிரதேசங்களில் வெள்ள நீர் நிரம்பியுள்ளதாலும் அறியாத மற்றும் அனுபவமில்லாத இடங்களில் தனியாகவும் கூட்டமாகவும் நீராடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் , தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பொது மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை நியாயப்படுத்துகின்றது ஈ.பி.டி.பி.!

## நாட்டின் இறையாண்மையை இழிவுபடுத்தும் சாராருக்கு அது இடைஞ்சலாகவே இருக்கும் எனவும் வியாக்கியானம்

நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் என்பது பேச்சு சுதந்திரத்தை முடக்குவதான ஒன்றல்ல. மாறாகக் கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் நமது நாட்டின் இறைமையைப் பாதிக்கின்ற விடயங்களை நெறிப்படுத்துகின்ற ஒரு சட்டமூலம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிகழ்நிலை காப்பு ஆணைக் குழுவை ஸ்தாபிப்பது, சில தொடர்பாடல்களை தடை செய்வது, தடை செய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலை கணக்குகள் (Online Account) மற்றும் போலி நிகழ்நிலை கணக்குகளை பயன்படுத்துவதை தடுப்பது உள்ளிட்ட சில விடயங்கள் இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கைக்குள் இடம்பெறுகின்ற சம்பவங்கள் தொடர்பாக பொய்யான கூற்றுக்களைப் பகிர்தல், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலான பொய்யான அறிவிப்புகளைச் செய்தல், கலகத்தை ஏற்படுத்துவதற்காக பொய்யான கூற்றுகள் மூலம் அநாவசியமான முறையில் ஆத்திரமூட்டுதல், பொய்யான கூற்றொன்றின் மூலம் மதக்கூட்டம் ஒன்றைக் குழப்புதல், மத உணர்வுகளை புண்படுத்த வேண்டும் என்ற திடமான உள்நோக்கத்துடன் போலியான கூற்றுகளைப் பகிர்தல், மோசடி செய்தல், ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல், அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் உள்நோக்கத்துடன் பொய்க் கூற்றுகளின் மூலம்




வேண்டுமென்றே நிந்தை செய்தல், கலகத்தை அல்லது அரசாங்கத்திற்கு எதிரான குற்றமொன்றை ஏற்படுத்தும் உள்நோக்கத்துடன் பொய்யான அறிவிப்புகளை பரப்புதல், துன்புறுத்தல்களை மேற்கொள்வதற்கான சம்பவங்கள் தொடர்பான கூற்றுகளை தொடர்பாடல் செய்தல், சிறுவர் துஷ்பிரயோகம், தவறொன்றைச் செய்வதற்காக தன்னியக்கச் செய்நிரல்களை உருவாக்குதல் அல்லது மாற்றுதல், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையுடன் இணங்கி செயற்படத் தவறுதல் என்பன இந்தச் சட்டத்தின் கீழ் குற்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தடை செய்யப்பட்ட அறிக்கையால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, தடை செய்யப்பட்ட அறிக்கையை வெளியிட்ட நபர்களுக்கு அல்லது அவற்றுடன் தொடர்புடைய நபர்களுக்கு உத்தரவுகளை வழங்கவும், ஏதேனும் தடை செய்யப்பட்ட அறிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள், அத்தகைய தடை செய்யப்பட்ட அறிக்கையிடலுக்கு பதிலளிப்பதற்கான வாய்ப்பை வழங்குமாறு பணிப்புரை வழங்கவும் பொய்யான கூற்றுகளை அறிவிக்கின்ற நபர்களுக்கு அத்தகைய கூற்றுகள் அறிவிக்கப்படுவதை நிறுத்துமாறு அறிவுறுத்தவும், பணிப்புரை வழங்கவும் தடை செய்யப்பட்ட கூற்றொன்றைக் கொண்டுள்ள நிகழ்நிலை அமைவிடமொன்றுக்குள் (on-line location) பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பத்தை இல்லாமலாக்குவது அல்லது அத்தகைய நிகழ்நிலை அமைவிடத்தில் இருந்து தடை செய்யப்பட்ட கூற்றை அகற்றுவதற்கு எவரேனும் இணைய சேவை வழங்குநர்களுக்கு அல்லது இணைய இடையீட்டாளர்களுக்கு அறிவித்தல்களை வழங்கவும் நீதிமன்றத்தை அவமதிக்கும் அல்லது நீதித்துறையின் அதிகாரம் மற்றும் பக்கசார்பின்மையின் பேணுகைக்கு பாதகமாகவுள்ள எவையேனும் தொடர்பாடல்களை உகந்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் இந்த சட்டம் என்பது நாட்டின் இறையாண்மையை இழிவு படுத்தவும் கேள்விக்குட்டிடுத்தவும் முற்படுவொருக்கு குறிப்பாக குறிப்பாக குறுந்தூர்மலை, வெடுக்குநாறி. கன்னியா போன்ற நீதிமன்ற தீர்ப்புகளை அவமதித்த, அவமதிக்கின்ற சாராருக்கு இவ்வாறான சட்டமூலம் கட்டுப்படுத்தும். - எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

# மட்டக்களப்பு, மாந்தீவு வாவியில் இருந்து மீனவர் 2 நாள்களின் பின் சடலமாக மீட்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, வவுணதீவு மாந்தீவு வாவியில் இரண்டு தினங்களுக்கு முன்னர் காணாமல் போன மீனவரொருவர் சடலமாக நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளார்.

ஈச்சந்தீவு, நாவற்காடு பிரதேசவாசியான 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுந்தரன் விமலநாதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இம் மரணம் தொடர்பாக வவுணதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கினிகத்தேன பகுதி ஓடையில் சடலமாக ஒருவர் மீட்கப்பட்டார்!

(மஸ்கெலியா நிருபர்)

கினிகத்தேன பகுதியில் ஓடை ஒன்றில் இருந்து இன்று காலை ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கினிகத்தேன பொலிஸ் பிரிவில் உள்ள கெனில்வத்தை 2 ஆம் பிரிவில் நேற்று மதியம் 11 .30 மணியளவில் தனது தந்தைக்கு விறகு சேகரிக்க சென்ற 46 வயது உடைய திருமணம் முடித்த சுப்புன் நாமல் என்பவர் வீடு திரும்பாததால் அவரது தந்தை கினிகத்தேன பொலிஸ் நிலையத்தில் நேற்று இரவு 8 .30 மணியளவில் முறைப்பாடு செய்திருந்தார்.

கினிகத்தேன பொலிஸார் கெனில்வத்தை 2 ஆம் பிரிவில் உள்ள வனப்பகுதியில் இன்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போது விறகு சேகரிக்கச் சென்ற நபர் ஓடையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இன்று காலை 10 மணிக்கு அவரது சடலம் காணப்பட்ட இடத்துக்கு அவரது தந்தை சென்று பார்த்து மகன்தான் என்று அடையாளம் காட்டினார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி மற்றும் நாவலப்பிட்டி நீதிமன்ற நீதிவான் ஆகியோர் சென்று பார்வையிட்ட பின்னர் சடலம் கினிகத்தேன மாவட்ட வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு செல்லப்பட்டது.

கினிகத்தேன பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டு கழக
ஏற்பாட்டில் DAN TV யின்
அனுசரணையுடன்



வடமராட்சி கிழக்கில்
03வது மாபெரும்
பட்டத் திருவிழா
2024

காலம் : 16.01.2023 (செவ்வாய்கிழமை)
நேரம் : பிற்பகல் 2.00 மணி
இடம் : கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டுக் கழக மைதானம்

தங்களின் கற்பனைத்திறனுக்கு எம் மண்ணில் ஓர் அங்கீகாரம் தமிழரின் பண்பாட்டு கலையை எம்முடன் சேர்ந்து கொண்டாடி பணப்பரிசில்களையும் வெற்றி பெற்று தைபொங்கலை கொண்டாடுங்கள்.



முதலாம் பரிசு 100,000/=
இரண்டாம் பரிசு 50,000/=
மூன்றாம் பரிசு 25,000/=



பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்
றஜனி : 077 843 5381 தயாபரன் : 077 152 9308
ஏற்பாட்டுக்குழு



# குருந்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு என்று தொடரப்பட்ட வழக்கை கிடப்பில் போட்டது முல்லை நீதிமன்று

(லியோ)

முல்லைத்தீவு – குருந்தூர்மலையில் மேற்கொள்ளப்பட்ட பௌத்த வழிபாடுகளுக்கு இடையூறு விளைவித்தனர் எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர்களான விநோநோகரதலிங்கம், செ.கஜேந்திரன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூகசெயற்பாட்டாளர் ஜூட் நிக்சன் ஆகியோர் மீது கல்கமுவ சந்தபோதி தேரர் உள்ளிட்ட பௌத்த தேரர்களால் தொடரப்பட்ட வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறும் வரை முல்லைத்தீவு பதில் நீதிவானால் கிடப்பில் போடப்பட்டுள்ளது.



மீளவும் அறிவித்தல் கிடைத்தால் மாத்திரம் வழக்கில் பெயர்குறிப்பிடப்பட்டுள்ள சந்தேக நபர்கள் வழக்கிற்கு முன்னிலையாகவேண்டுமெனவும் முல்லைத்தீவு பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதிவான் தட்சணாமூர்த்தி கெங்காதரனால் மேற்படி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸார் தாங்கள் இவ்விடயம் தொடர்பாக சட்டமா அதிபரிடம் மேலதிக ஆலோசனை பெற வேண்டும் என நேற்று மன்றின் முன் விண்ணப்பம் செய்திருந்தனர்.

சந்தேகநபர்கள் பக்கத்தில் நாடளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் ஜூட் நிக்சன் ஆகியோர் மன்றில் தோன்றியிருந்தனர்.

அவர்கள் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தைச் சார்ந்த அனைத்து சட்டத்தரணிகளும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இந்த வழக்கு பிழையாகத் தாக்கல் செய்யப்பட்டதெனவும், அமைதி வழியிலே போராடிய அரசியல்வாதிகள் மற்றும் சமூக அக்கறையுள்ளவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கெனவும் அவர்கள் மன்றிற்குத் தெரிவித்திருந்தனர்.

அத்தோடு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறும் வரையில் இவ்வழக்கைக் கிடப்பில் போடவேண்டும் எனவும், மேலதிகமாக இந்த வழக்கைத் தொடர வேண்டும் எனவும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் மாத்திரம் இந்த சந்தேக நபர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு மீண்டும் இந்த வழக்கானது நீதிமன்றிலே கொண்டு செல்லப்பட முடியும் எனவும் ஒருமித்து விண்ணப்பம் செய்திருந்தனர்.

சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட பதில் நீதிவான் நேற்றிலிருந்து இந்த வழக்கைக் கிடப்பில் போட்டுள்ளமையுடன், மீளவும் அறிவித்தல் கிடைத்தால் மாத்திரம் வழக்கில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சந்தேக நபர்கள் வழக்கிற்கு வருகை தர வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளார்.

# நாளை முதல் இரு தினங்கள் அமைச்சர் டக்ளஸ் மன்னாரில்



(ந.லோகதயாளன்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளை முதல் இரு தினங்கள் மன்னார் மாவட்டத்தில பல சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இச் சந்திப்புக்களில் கடற்றொழில் அமைப்புக்கள், தமது கட்சியின் தோழர்கள், அரசஅதிகாரிகள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்ற பலரையும் அவர் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடற்றொழில் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களும் இச்சந்திப்புக்களுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.




# வெருகல் மக்களுக்கு உலருணவு பொதிகள்

(ஹஸ்பர் )

திருகோணமலை மாவட்டம் வெருகலில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய லயன்ஸ் கழகம் உலருணவுப் பொதிகளை வழங்கியது.




# ஏறாவூர் குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்கல்





(கே. எ. ஹமீட் )

ஏறாவூர் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக தாழ் நிலப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான இடங்களை மையப்படுத்தி ஏறாவூர் சமூக நலன் அபிவிருத்தி ஒன்றியம் சமைத்த உணவை 400 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 225 பேருக்கு நேற்று முன்தினம் (10) வழங்கியது.

அமைப்பின் அங்கத்தவர்கள் நேரடியாகச் சென்று சமைத்த உணவை வழங்கினர்.



# கிட்டங்கி பாலத்தில் ஊடான போக்குவரத்தில் ஆபத்து!



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சேனநாயக்க சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதை அடுத்து வெளியேற்றப்படும் வெள்ளநீர் காரணமாக அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள தாழ் நில பிரதேசங்கள் வெள்ள நீரில் மூழ்கி வருகின்றன.

கல்முனை பிரதான நகரையும் நாவிதன்வெளி பிரதேசத்தையும் இணைக்கும் கிட்டங்கி பாலத்தின் ஊடாக சுமார் 4 அடிகளுக்கு மேல் வெள்ள நீர் பெருக்கெடுத்து பாய்ந்து ஓடுகிறது.

இந்த வீதி ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வீதியை பயன்படுத்தும் பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை நாவிதன்வெளி சவளக்கடை பிரதேசத்துக்கும் சம்மாந்துறைக்கும் இடையிலான பிரதான வீதியின் ஊடாக வெள்ளநீர் பெருக்கெடுத்து பாய்வதனால் இந்த வீதியினூடான போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

நாவிதன்வெளி – வெல்லாவெளி ஆகிய பிரதேசங்களை இணைக்கும் பிரதான வீதியின் ஊடாகவும் வெள்ளநீர் பாய்ந்து செல்வதால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தமது போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பகுதிகளில் அரச பணிகளுக்காக சென்றுவரும் அரச உத்தியோகத்தர்கள் தமது பணிகளுக்கு செல்வதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர் கொண்டுள்ளனர்.

# காரைதீவு - மாவடிப்பள்ளி வீதியில் சிறிய வாகனங்களில் செல்லத் தடை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு – மாவடிப்பள்ளி பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ ஆகியவற்றில் பயணிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களிலும் வெள்ளநீர் பரவிவரும் நிலையில் கல்முனை – அம்பாறை நெடுஞ்சாலையில் காரைதீவுக்கும் மாவடிப்பள்ளிக்கும் இடையில் வெள்ளநீர் பரவிச் செல்வதால் மோட்டார் சைக்கிளிலும் ஓட்டோவிலும் பயணிப்பது மிகவும் ஆபத்து என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வீதியில் சில இடங்களில் வெள்ள நீரோட்டத்தால் பள்ளமும் குழிகளும் ஏற்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுவதால் வீதியோரத்தால் பயணிப்பது ஆபத்தாக அமையலாம் என்று வீதி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 12.01.2024




கடின உழைப்பு மற்றும் உறுதி மூலம் நீங்கள் சிறப்பாக செயலாற்றுவீர்கள். நீங்கள் எந்தச் செயல் செய்தாலும் மகிழ்ச்சியாக உற்சாகமாக செய்யுங்கள். இதனால் நன்மை விளையும்.

இன்று நீங்கள் சிறப்பாகவும் விரைந்தும் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உறவின் அம்சங்களுக்கு மதிப்பு அளிப்பீர்கள். நட்பான உறவு கொள்வீர்கள்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். திருப்திகரமாக இருக்கும். நீங்கள் பணம் அதிகம் சேமிப்பதற்கான நிலையும் காணப்படும்.

இன்று நீங்கள் போதிய ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் இருப்பீர்கள்.




உங்கள் செயல்திறனை மேம்படுத்துங்கள். இன்று வெற்றி கிடைக்கும் நாள். உங்களை முன்னேற்றிக்கொள்ளலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணி செய்யும் பாணியில் மாற்றங்கள் ஏற்படலாம். பணியில் நீங்கள் மும்மரமாக இருப்பீர்கள்.

பெரியோர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியமான உறவிற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி மிதமாக இருக்கும். வரவு செலவு இரண்டிற்குமான வாய்ப்பு அதிகம். பணத்தை கவனமாக கையாள்வது சிறந்தது.

இன்று சளி சம்பந்தமான பிரச்சினை காணப்படும். மேலும் கால் மற்றும் தொடைகளில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. என்றாலும் இன்று முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது பொறுமை அவசியம்.

இன்று உறவில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பேசத் தொடங்குமுன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து பேச வேண்டியது அவசியம்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் கவலையை ஏற்படுத்தும்.

இன்று பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உணவுக் கட்டுப்பாடு மேற்கொள்வது சிறந்தது. இனிப்பு வகை உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்று பெரும்பாலும் உங்களுக்கு சாதகமான நாள். இன்று நல்ல நண்பர்கள் மற்றும் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள உகந்த நாள். பொது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதன் மூலம் மகிழ்ச்சியும் திருப்தியும் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். தொழிலைப் பொறுத்த வரை நல்ல லாபம் கிடைக்கும்.

குடும்பத்தில் அமைதியும் திருப்தியும் காணப்படும். உங்கள் வீட்டில் விருந்தினர்களின் வருகை உற்சாகத்தை அளிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிக்கும் ஆற்றலும் உயர்ந்து காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் சளி இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




முயற்சியின் மூலம் வெற்றி கிடைக்கும் நாள். பயணம் மூலம் வெற்றி காண்பதற்கு வாய்ப்புள்ள நாள்.

பணியிடச் சூழல் திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் உறவில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படும். என்றாலும் இன்று பொதுவாக இன்று மகிழ்ச்சி நிலவும் நாள்.

பணம் அதிகமாக காணப்படும். இன்னும் அதிக பணம் தேவைப்பட்டால் வங்கியில் கடன் வாங்கி அதனை நல்ல முறையில் பயன்படுத்தலாம்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.




இன்று உங்களுக்கு நோக்கம் நிறைவேறும் வகையில் பயனுள்ள முடிவுகளை எடுக்கும் நாள். இன்று நீங்கள் நற்பலன்களை எதிர்பார்க்கலாம்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். பணியில் உங்கள் திறமைகளை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று உறவில் அமைதியும் நல்லிணக்கமும் காண்பீர்கள். குழந்தைகளின் வளர்ச்சி மனத் திருப்தியை அளிக்கும்.

பங்குகளில் முதலீடு செய்வது லாபகரமாக இருக்கும். பங்கு வர்த்தகம் மூலம் லாபம் கிடைக்கும்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக உணர்வீர்கள்.




இன்று துடிப்பான நாள். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதில் இன்று நீங்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவீர்கள்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. பணியில் உங்கள் திறமை பிரகாசிக்கும்.

உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் பணம் காண்பீர்கள். உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்துக்குச் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சுய வளர்ச்சிக்கு இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் நலனுக்காக இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணியில் சீரான பலன்கள் கிடைக்கும். இன்று பணிகள் எளிதாகவும் சுமூகமாகவும் நடக்கும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நீங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் அமைதியான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பணத்தை பொறுத்தவரை சிறப்பான நாள். இன்று நிதிநிலையை சிறப்பாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் மற்றும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.01.2024




இன்று நீங்கள் பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். உங்கள் செயல்களை செய்யுங்கள். ஆனால் உடனடி பலனை எதிர்பார்க்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. நீங்கள் பணியில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சுமூகமாகப் பணிகள் நடக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

குடும்பத்துக்குத் தேவையான பிணைப்பு இன்று காணப்படாது. பேசும் போது கவனம் தேவை.

அதிக செலவுகள் காரணமாக இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். சேமிப்பும் குறைவாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.




முக்கிய முடிவுகளை வேறொரு நாளைக்கு தள்ளிப்போடுவது சிறந்தது. சுப காரியங்கள் நடப்பதும் தாமதம் ஆகும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். உங்கள் பணியில் பிரகாசிக்க நீங்கள் நம்பிக்கையுடன் செயல் பட வேண்டும்.

குடும்பத்தில் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களிடம் நல்லுறவு பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். சேமிப்பு பழக்கத்தை பராமரிப்பது நிதியின் ஸ்திரத்தன்மைக்கு உதவும்.

கால்கள் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று சமநிலையான நாள். நல்லுறவையும் நல்ல புரிந்துணர்வையும் பராமரிக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொழில் செய்பவர்களுக்கு இன்று சிறப்பான நாள். அதிக லாபம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. வேலை புரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

குடும்ப உறவில் அன்பும் நல்லிணக்கமும் காணப்படும். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று லாபம் காண்பீர்கள்.இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

சளிப் பிரச்சினை காணப்படும். மற்ற படி உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இது உங்களுக்கு சிறிது வருத்தம் அளிக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

பணியிடச்சூழல் சாதகமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது மாறுபட்ட அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் உறவில் அன்பு மயமான உணர்வும் உற்சாகமும் காணப்படும். உங்கள் குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்துடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.









# மன்னார் ஆஸ்பத்திரியின் சிற்றூழியர்கள் பகிஷ்கரிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் சிற்றூழியர்களும் நேற்று வியாழக்கிழமை (11) காலை முதல் சுகயீன விடுமுறை, பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் சிற்றூழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள அதிகரிப்பு, ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார சேவைகள் சிற்றூழியர்கள் சுகயீன விடுமுறை, வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் தூர இடங்களில் இருந்து மருத்துவ உதவிகளை பெற்றுக் கொள்ள மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

# கிழக்கு ஆளுநருக்கு தமிழகத்தில் வரவேற்பு

(எஸ்.கீதபொன்கலன்)

அயலகத் தமிழர் தின விழாவில் பங்கேற்பதற்கு இந்தியா சென்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரைத் தமிழக அமைச்சர் செஞ்சி மஸ்தான் வரவேற்றார்.

இந்தியாவின் தமிழக அரசால் நடத்தப்படும் 'அயலகத் தமிழர் தினம் 2024' விழாவில் சிறப்புரை ஆற்றுவதற்காக, தமிழக அரசால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று இந்தியா சென்றுள்ளார் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான்.

தமிழ்நாடு அரசின் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவருக்கு அமோக வரவேற்பளித்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், நேற்றும் (11) இன்றும் (12) நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடக்கும் இந்த நிகழ்வில், இந்தியா, இலங்கை,






மலேசியா, சிங்கப்பூர், டுபாய், லண்டன், கனடா, மொரிசியஸ், ஆஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்தியா சென்ற கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோரைத் தமிழக அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் நேரடியாகச் சென்று வரவேற்றார்.



# ஜப்பான் நிதியமைச்சர் சுசுக்கி சுனிச்சி ஜனாதிபதி ரணிலுடன் கலந்துரையாடல்

இலங்கைக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பான் நிதியமைச்சர் சுசுக்கி சுனிச்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜப்பான் நிதியமைச்சர் சுசுக்கி சுனிச்சி இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்றுப் பிற்பகல் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனினால், ஜப்பான் நிதியமைச்சர் சுசுக்கி சுனிச்சி உள்ளிட்ட தூதுக்குழுவினருக்கு, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.



# சட்டவிரோத வேட்டைக்காக வில்பத்து சரணாலயப் பகுதிக்குள் நுழைந்தவர் யானையின் சீற்றத் தாக்குதலில் உடல் சிதறிப் பலி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சட்டவிரோதமாக வில்பத்து தேசிய சரணாலயப் பகுதிக்குள் வேட்டைக்குச் சென்ற ஒருவர் யானை தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

வில்பத்து தேசிய சரணாலயத்தின் புக்குளம் அருகிலுள்ள பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சரணாலயத்திற்குள் புகுந்து சட்டவிரோதமாக விலங்குகளை வேட்டையாடுவோரை தேடி வில்பத்து தேசிய சரணாலய அதிகாரிகள் வலை விரித்துள்ள நிலையில், தனி யானையொன்று சீற்றத்துடன் துரத்திச் சென்று தாக்கியதில் உடல் சிதறுண்ட நிலையில் இவர் உயிரிழந்துள்ளார் என சரணாலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வேட்டைக்காரர்கள் கடல்வழியாக மீன்பிடிப்படகில் வந்து, குருந்திமலையில் வில்பத்து தேசிய சரணாலயத்திற்குள் பிரவேசித்திருக்கின்றனர் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ரின் மீன் இறக்குமதியை இடைநிறுத்த கடற்றொழில் அமைச்சர் ஆலோசனை



வெளிநாடுகளில் இருந்து ரின் மீன் இறக்குமதி செய்வதை நேற்று முதல் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கியுள்ளார்.

ரின் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு ரின் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக, ரின் மீன் இறக்குமதியை நிறுத்துமாறு கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்தவிற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை வழங்கியுள்ளார்.

# பெருவெள்ளத்தினுள் மூழ்கியது தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**(நூருல் ஹுதா உமர், கனகராசா சரவணன்)**

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட மழை, வெள்ளம் மற்றும் நீர்த்தேக்க வான்கதவுகள் திறப்பு ஆகியவை காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகம் நீரில் மூழ்கியுள்ளது.

பல்கலைக்கழக எல்லைக்குள் வெள்ள அபாயம் ஏற்படலாம் என்ற அச்சத்தில் ஒலுவில் வளாக மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளும் 2024 ஜனவரி 16 ஆம் திகதி வரை இடைநிறுத்தப்படுகின்றன என அறிவிக்கப்பட்டு நேற்று முன்தினமே மாணவர்களும் விடுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

வளாகத்துக்குள் வெள்ள அபாயத்தால் பாதிக்கப்படும் எனச் சந்தேகிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்த அகற்றப்படக் கூடிய அனைத்துப் பொருள்களும் தஸ்தாவேஜ்களும் பல்கலைக்கழக அனர்த்த முகாமைத்துவக் குழுவின் கண்காணிப்பில் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டிருந்தன.

இருந்தபோதும் தொடரான மழையின் காரணமாக ஏற்பட்டுள்ள அவசரகால வான்கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக எதிர்பாராத சில பிரதேசங்களையும் வெள்ளம் ஆக்கிரமித்துள்ளது. எதிர்காலத்தில் மேலதிக வெள்ள அபாயம் ஏற்படலாம் என எதிர்பார்க்கும் இடங்களில் உள்ள ஆவணங்களையும் பல்கலைக்கழக சொத்துக்களையும் பாதுகாக்கும் மற்றும் அகற்றும் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், இழப்புக்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பில் பின்னர் அறிவிப்பதாகவும், தற்போதைய காலநிலை முன்னறிவிப்புகளால் ஏற்படக்கூடிய சாத்தியமான ஆபத்துகளையும் கள நிலவரங்களையும் பல்கலைக்கழகத்தின் மூத்த ஆலோசனைக் குழுவினர் உன்னிப்பாக ஆராய்ந்து வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றனர் எனவும் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பல்கலைக்கழக ஊழியர்களுடன் இணைந்து முப்படையினரும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

